பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 20 சனிக்கிழமை 07.10.2023 கதிர் 330

# நீதி கேட்டு ஒக்டோபர் 9 முல்லைத்தீவில் பேரணி

## பேதங்களின்றி அனைவரையும் பங்கேற்ற இளைஞர்கள் அழைப்பு

(ச.தவசீலன்)

நீதிக்கான மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டப் பேரணிக்கு ஒன்றுகூடு மாறு முல்லைத்தீவு இளைஞர்கள் அறைகூவல் விடுத்துள்ளனர்.

முல்லைத்தீ நேற்று செய்தியாளர் களிடம் பேசிய அவர்கள், நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு அவர் நாட்டைவிட்டு வெளியேறக் காரணமாக இருந் தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி இந்தப் போராட்டம் இடம் பெறவுள்ளதாகத் தெரிவித்தனர்.

ஒக்டோபர் 9 காலை 9 மணியள வில் முல்லைத்தீவு சுனாமி நினைவால யத்திற்கு முன்பாக இந்த நீதிக்கான கண்டன ஆர்ப்பாட்ட பேரணியானது ஆரம்பமாகி அங்கிருந்து பொதுசந்தை ஊடாக முல்லைத்தீவு மாவட்ட செயலகம் வரை சென்று அங்கு ☞ 2

## இனி அது ரகசியம் அல்ல!

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரணவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு அவர் பதவிகளில் இருந்து விலகி வெளிநாட்டுக்குச் சென்ற விவகாரம் பெரும் சர்ச்சையாகி போராட்டங்கள் இடம்பெற்றுவரும் நிலையில், ஏற்கனவேகொதிநிலையில்இருக்கும் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்தையொட்டிய வெளியானசெய்தியொன்றுளிகின்ற நெருப்புக்கு எண்ணெய் ஊற்றியது போன்று அமைந்தது.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியைத்தோண்டும்பணிகள் ஏற்கனவே தொடர்ச்சியாக 6 நாள்கள் இடம்பெற்றன. அதன் பின்னர் அவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. இந்தப் பணிகளில் தொல்பொருள் திணைக்கள ☞ 2

மு.கா. உறுப்பினர் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கியது

## சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததொரு தீர்ப்பு

### சுமந்திரன் எம்.பி. வரவேற்பு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து நசீர் அஹமட் நீக்கப்பட்டதை உயர்நீதிமன்றம் அங்கீகரித்து அளித்துள்ள தீர்ப்பானது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததென ஜனாதிபதிசட்டத்தரணிஎம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் ☞ 2

## சட்டத்தரணிகள் போராட்டம் 5ஆவது நாளாகவும் தொடர்வு

முல்லைத்தீவுநீதிபதி ரி.சரவணராஜாவுக்குநீதி கோரி முல;லைத்தீவு நீதிமன்றசட்டத்தரணிகள் முன்னெடுத்துள்ள புறக்கணிப்புப் போராட் டம் 5 ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

முல்லைத்தீவு நீதிபதி ரீ.சரவணராஜா அவர்களிற்கு இழைக் கப்பட்ட அநீதிக்கு எதி ராக,முல்லைத்தீவுசட்டத் தரணிகள் சங்கம் ஒக் டோபர்2ஆம்நாள்இந்தக் கால வரையறையற்ற போராட்டத்தைத் தொடங்கியிருந்தது.

நீதி துறைக்கான சுதந்திரமும், சுயாதீன தன்மைகளும் உறுதி செய்யப்படும் வரை பணிபுறக்கணிப்பில் ஈடுபடுவோம் என முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் எடுத்த தீர்மானத்துக்கு அமைய போராட்டம் தொடர்கின்றது என்று எமுல்லைத்தீவுமாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் த. பரஞ்சோதி தெரிவித் திருந்தார்

முல்லைத்தீவு நீதி மன்ற நடவடிக்கைகள் பாதிக் கப்பட்டிருக்கின்ற அதே வேளையிலே திங்கட்கிழமை மற்றும் புதன்கிழமைகளில் நடைபெறுகின்ற மாங்குளம் நீதிமன் றத்தினுடைய நடவடிக் கைகளுக்கும் சட்டத் தரணிகளின் யாரும் செல்லவில்லை.

## நீதிபதிக்கு நீதி கேட்டு முழு அடைப்புக்கு முடிவு



முல்லைத்தீவு நீதிப திக்கு நீதி கோரி வடக்கு கிழக்கில் அடுத்தவாரம் முழு அடைப்புப் போராட் டத்தை முன்னெடுக்க 7 ததமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து முடிவு செய்துள்ளன.

முல்லைத்தீவு நீதிபதி விவகாரம் தொடர்பாக அடுத்த கட்டமாக எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுப்பதுஎன்பது குறித்து 7 தமிழ் தேசிய கட்சிகள் நேற்ற ஒன்றுகூடிஆராய்ந்தனர். இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான விக்னேஸ்வரன், சித்தார்தன், ☞ 2

## பாதுகாப்பு செயலர், இராணுவ தளபதியால் நாடாளுமன்ற உறுப்பினருக்கு அச்சுறுத்தல்

### தெரிவுக்குழுவுக்கு அழைத்து விசாரிக்க சந்திம வீரக்கொடி வலியுறுத்து

இராணுவ உயர் அதிகாரிகளின் ஊழல் மற்றும் வீண் செலவு களை மட்டுப்படுத்து மாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான தெரிவுக் குழுவில் நான் குறிப் பிட்டபோது பாதுகாப்பு செயலாளர், இராணுவ தளபதி ஆகியோர் எனக்கு அச்சுறுத்தல் விடுத்தார்கள்.

ஆகவே இவர்களை உடனடியாக நாடா ளுமன்ற ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமை தொடர்பான தெரிவுக் குழுவுக்கு அழைத்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பாராளுமன்றத்தில் சுயாதீனமாகசெயற்படும் எதிரணியின்உறுப்பினர் சந்திமவீரக்கொடி ☞ 2

## பாதுகாப்பு துறைசார் குழுவிலிருந்து சந்திம வீரக்கொடியை நீக்குங்கள்

### சரத்வீரசேகர, சமல் ராஜபக்ஷ வலியுறுத்து

தேசிய பாதுகாப்பு பற்றியதுறைசார்மேற்பார் வைக் குழுவிலிருந்து சந்திம வீரக்கொடியை நீக்குமாறு பரிந்து ரைத்துள்ளஅக்குழுவின் தலைவரும் நாடா ளுமன்ற உறுப்பின ருமான சரத்வீரசேகர, சமல் ராஜபக்ஷ பாது காப்புச்செயலாளர் உள் ளிட்டவர்களை அழைத்துநாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்பில் மன்னிப்புக் கோரியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

நாடாளுமன் ☞ 2

## கொழும்பில் பயங்கரவாத தாக்குதல் தகவலின் உண்மைத் தன்மை என்ன?

### எதிர்க் கட்சித் தலைவர் சபையில் கேள்வி

கொழும்பில் பயங் கரவாத தாக்குதல் அச்சுறுத்தல் தொடர் பான தகவலின் உண் மைத்தன்மையை அரசாங்கம் நாட்டுக்கு வெளிப்படுத்தவேண்டும். இது தொடர்பாக நாடாளுமன்றத்துக்கு விசேடஅறிவிப்பொன்றை விடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை (6) விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப் பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர்அங்குதொடர்ந் து தெரிவித்ததாவது;

கொழும்பில்முக்கிய 7 இடங்களுக்கு ஐ.எஸ். குண்டுத்தாக்குதல் அச்சுறுத்தல்எனசிங்கள தேசியபத்திரிகைஒன்றில் அறிக்கையிடப்பட் டிருக்கிறது.

இந்த விடயம் தொடர்பாக நாடாளுமன் றத்துக்கும் நாட்டுக்கும் அறிவுறுத்த வேண்டும். இந்த பயங்கரவாத நடவடிக்கை தொடர் பாக சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் ஐ.எஸ். பயங்கரவா திகளால் திட்டமிடப்பட் டிருப்பதாகவே குறித்த பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இது மிகவும் பார தூரமான விடயம். அதனால் இதன் உண்மை தன்மை தொடர்பாக ஆராய்ந்து விசாரணைமேற்கொள்ள வேண்டும். ஏனெனில் 30 வருட பயங்கரவாத யுத்தம், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் ☞ 2

## கொழும்பில் தாக்குதலை தடுக்க எதிர்க் கட்சித் தலைவர் வலியுறுத்து

கொழும்பின் சில பகுதிகளில் குண்டுத் தாக்குதல்கள்நடத்தப்பட விருப்பதாக எச்சரித்த ஊடக அறிக்கை தொடர்பில்சபையில்அரச தரப்பின் கவனத்திற்கு கொண்டு வந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அவ்வாறான அழிவுகள் ஏற்படாதவாறு தடுக்க உடனடியாகநடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

பயங்கரவாத தாக்குதல்களை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவும்இது தொடர்பாகபொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்து, சபையில் அறிக்கை தாக்கல்செய்யவேண்டும் எனவும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றம், கொழும்பு துறைமுக நகரம் மற்றும் கங்காராம பகுதி ☞ 2

## புண்ணியத்தைத் தேடி அலையும் முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷ

புண்ணியத்தைத் தேடி தான் விகாரை களுக்கும் ஆலயங் களுக்கும் செல்கிறார் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

வெள்ளவத்தை ஸ்ரீ மயூரபதி பத்திரகாளி அம்மன் ஆலயத்திற்கு சென்று வழிபாடுகளை மேற்கொண்டதன் பின் னர் ஊடகங்களுக்கு கருத்துக்களை வெளியி டும்போதே மேற்கண் டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரி வித்ததாவது:

கேள்வி:- திடீரென தொடர்ச்சியாக விகாரை களுக்கும் கோவில் களுக்கும் செல்கின்றீர் களே?

பதில்:- ஆம், புண்ணியத்தை தேடுவதற்காக செல் கின்றேன். எமது கட்சி யில் இளைமையான குழுவினர் உள்ளனர். அவர்களுக்கு ஆதரவு வழங்கியவாறு நாம் முன்னோக்கிப் ☞ 2

## டிஜிட்டல் பொருளாதார மாற்றத்தை துரிதப்படுத்தும் திட்டம் ஒக். 11 முதல்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் எண் ணக்க ருவுக்கமைய, டிஜிட்டல் பொருளாதார மாற்றத்தைத் துரிதப் படுத்தும் வேலைத் திட்டத்தை ஒக்டோபர் 11ஆம் திகதி முதல் ஆரம்பிக்க தொழில் நுட்ப அமைச்சு தீர்மா னித்துள்ளது.

அதற்கு இணையாக அரச மற்றும் தனியார் துறையினர் ஒன்றுபட்டு டிஜிட்டல் பொருளாதார திட்டத்தைசெயற்படுத்தும் முறைமை ஆரம்பிக் கப்படவுள்ளது.

தற்போது தயாரிக் கப்பட்டிருக்கும் டிஜிட்டல் பொருளாதார முறைமை யின் ஊடாக இலங்கையின்பொருளா தாரத்திற்கு மிகப்பெரிய பங்களிப்பு கிடைக்கும் என தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனகஹேரத்நம்பிக்கை தெரிவித்தார்.

ஜனாதிபதி ☞ 2

## இனி இது .....

அதிகாரிகள், முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களைச் சேர்ந்த சட்ட மருத்துவ அதிகாரிகள் ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர்.

இவர்களுக்கான கொடுப்பனவுகள் இன்னும் வழங்கப்படவில்லையென்றும் இதனால் புதைகுழியைத் தோண்டும் பணிகள் மீண்டும் தொடங்கப்படுவது கேள்விக்குறி என்றும் செய்திகள் வெளியாகி இருந்தன.

புதைகுழியைத் தோண்டுவதற்கான பணம் ஏற்கனவே முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கு கொழும்பிலிருந்து அனுப்பப்பட்டுவிட்டது. ஏற்கனவே செய்யப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் இந்தப் பணம் வழங்கப்பட்டுள்ளது. அப்படியிருந்தும் கொடுப்பனவுகள் உரியவர்களுக்குவழங்கப்படவில்லை என்பதேஇப்போதுபிரச்சினை.

விவகாரம் என்ன ஏது என்றுகிண்டிக்கிளறியபோது ஒரு விடயம் தெரியவந்தது. கொடுப்பனவைவழங்குவதில் அல்ல பிரச்சினை, எவ்வளவு கொடுப்பனவு வழங்குவது என்பதில்தான் பிரச்சினை. இதில் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுவிட்டன. சட்ட மருத்துவ அதிகாரிகளின் கொடுப்பனவுகள்தான் வழங்கப்படவில்லை.

தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளுக்கு, துறைசார் நிபுணத்துவ சேவை வழங்குநர்கள் என்ற அடிப்படையில் அவர்களின் தராதரங்களுக்கு ஏற்ப ஆகக் கூடுதலாக ஒரு நாளைக்கு 15 ஆயிரம் ரூபாய் முதல் வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் முல்லைத்தீவுக்கு வந்து சென்றசெலவாக 45 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

அதேநேரம் முல்லைத்தீவு சட்ட வைத்திய அதிகாரி அங்கிருந்து கொக்குத்தொடுவாய்க்குச் சென்று வருவதற்கு நாளொன்றுக்கு போக்குவரத்துச் செலவாக 15 ஆயிரம் ரூபாயும் உணவுச் செலவாக 5 ஆயிரம் ரூபாயும் இதர செலவாக 5 ஆயிரம் --ரூபாயுமாக மொத்தம் 25 ஆயிரம் ரூபாய் தரப்படவேண்டும் என்று கோருகின்றார். யாழ்ப்பாண சட்ட வைத்திய அதிகாரி போக்குவரத்துச் செலவாக 30 ஆயிரம் ரூபாயும் உணவுச்செலவாக 5 ஆயிரம் ரூபாயும் இதர செலவாக 5 ஆயிரம் ரூபாயுமாக நாளொன்றுக்கு 40 ஆயிரம் ரூபாய் கோருகின்றார். நாளொன்றுக்கு இவ்வளவு பெரும் தொகையை வழங்குவதில்தான் இப்போது பிரச்சினை.

புதைகுழியைத் தோண்டுவதற்கான மதிப்பீட்டுப் பணிகளின்போது மாவட்டச்செயலகம் இவ்வளவு பெரும் தொகையை மதிப்பிட்டிருக்கவில்லை. அதனால், இப்போது சட்ட வைத்திய அதிகாரிகள் கோரும் இவ்வளவு பெரும் தொகையை நாளொன்றுக்கு வழங்கினால் கிடைத்திருக்கும் நிதி சொற்ப நாட்களிலேயே முடிந்து விடும் என்பதும், மதிப்பீட்டில் காட்டப்பட்ட தொகைக்கும் அசல் தொகைக்கும் இடையில் காணப்படப்போகும் பெரும் வித்தியாசத்தை எப்படி நியாயப்படுத்துவது என்பதும்தான் கொடுப்பனவு இழுபறிக்குக் காரணம்.

சட்டவைத்திய அதிகாரிகள் இருவருக்கும் மட்டும் நாளொன்றுக்கு 65 ஆயிரம் ரூபாய் படிஎன்றால் அகழ்வுப் பணிகள் இடம்பெற்ற 6 நாட்களுக்கும் சுமார் 4 லட்சம் ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டியிருக்கின்றது. மனிதப் புதைகுழியைத் தோண்டும் பணிகள் இன்னும் எத்தனை நாட்களுக்குத் தொடரும் என்று எதிர்வுகூறப்படவில்லை. குழிக்குள் ஒன்றின் மீது ஒன்றாக அடுக்கடுக்காகச் சடலங்கள் போடப்பட்டிருப்பதால் அவற்றை எடுப்பதில் தாமதம் ஏற்படுவதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், பணிகளை -முடிக்க இன்னும் நீண்ட நாட்கள் எடுக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நிலையிதான் கொடுப்பனவுகளுக்கான இழுபறி தொடர்கின்றது.

ஏற்கனவே மதிப்பிடப்பட்டதின்படியான நியாயமான கொடுப்பனவுக்கோரிக்கைக்கு அதிகாரிகள் இணங்கினால் விரைவிலேயே இந்தப் பிரச்சினை முடிவுக்கு வந்து அடுத்த கட்டத் தோண்டும் பணிகளுக்கானஆயத்தங்கள் மேற்கொள்ளப்படலாம். இல்லையேல் இந்த இழுபறி நீடிக்கவே போகின்றது.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## நீதி கேட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தைமேற்கொண்டபின்னர் மாவட்ட செயலாளர் ஊடாக நீதி அமைச்சின் செயலாளருக்கும் மனு கையளிக்கப்பட்டிருக்கின்றது.

''இலங்கையில் நீதி கேள்விக்குறியாகியுள்ளது. நீதியை எதிர்பார்த்து இளைஞர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த ஆர்ப்பாட்டத்திற்கு வடமாகாணத்திலுள்ள அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், அனைத்து பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், இளைஞர்கள், பொது மக்கள் என எல்லோரும் கட்சி பேதங்களுக்கு அப்பால் இணையவேண்டும்'' என்று இளைஞர்கள் கோரிக்கை விடுத்தனர்.

## கொழும்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளிட்ட பல பகுதிகளை தாக்குவதற்கு ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு திட்டமிட்டுள்ளதாக கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அரச சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் 05 ஆம் திகதி பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர், கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசிங்கவிடம் கொழும்பின் பல இடங்களை இலக்கு வைத்து குண்டுத் தாக்குதல்களை நடத்துவதற்கு திட்டம் தீட்டமிடப்பட்டு வருவதாக அறிவித்துள்ளதாக குறித்த ஊடகம் கூறியுள்ளது.

## சரித்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் சார்பில் ஆஜரான சுமந்திரன் தீர்ப்பு அறிவிக்கப்பட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 25 வருடங்களாக கட்சிமாறுகின்றநாடாளுமன்ற உறுப்பினர்கள்நீதிமன்றத்தில் தங்களுக்கு சாதகமான தீர்ப்புகளை தான் பெற்று வந்திருக்கிறார்கள்.

இது அதற்கு மாறுபட்ட ஒரு தீர்ப்பாகவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தலைவராக செயற்பட்ட அப்பதவியிலிருந்தும், அடிப்படை உறுப்புரிமையிலிருந்தும் நீக்கப்பட்ட நசீர் அஹமட்டுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு அமைந்துள்ளது.

இதனால் அவருடைய நாடாளுமன்ற உறுப்புரிமையும் வறிதாவதோடு கட்சிமாறுகின்றவர்களுக்கு இதுவொரு முன்னெச்சரிக்கையான தீர்ப்பாகவும் காணப்படுகின்றது என்றார்.

அமைச்சுப் பதவிக்காக கட்சி மாறுபவர்களுக்கு உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு எச்சரிக்கையாகஇருக்குமென ஸ்ரீலங்காமுஸ்லிம்காங்கிரஸின் செயலாளர்நாயகம்ஜனாதிபதி சட்டத்தரணிநிசாம்காரியப்பர் தெரிவித்தார்.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு அறிவிக்கப்பட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர்,

உயர்நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம், நசீர் அஹமட்டின் நாடாளுமன்ற பதவி வறிதாகிறது. ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு அதிகூடிய விருப்புவாக்குகளைப்பெற்று இரண்டாவது இடத்திலுள்ள அலி சாஹிர் மௌலானா நாடாளுமன்றத்திற்கு செல்லவுள்ளார்.

இதற்கான கடிதம் தற்போது தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் என்ற வகையில் அனுப்பப்பட்டுள்ளது என்றார்.

## பாதுகாப்பு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நத்தில் நேற்றையதினம் தேசிய பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் வைத்து தனது சிறப்புரிமையை மீறும் வகையில் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன, மற்றும் இராணுவத்தளபதி உள்ளிட்டவர்கள் நடந்துகொண்டதாக சபையின் கவனத்திற்கு சந்திம வீரக்கொடி வெளிப்படுத்தியதைத் தொடர்ந்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதன்போதுஅவர்மேலும் குறிப்பிடுகையில்,

தேசிய பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவானது எனது தலைமையில் செயற்படுகின்றது. இந்தக்குழுவினை நேற்றையதினம்(நேற்று முன்தினம்) நானே கூட்டியிருந்த நிலையில் அந்தக்குழுவில் அங்கத்தவராக இருக்கும் சந்திம வீரக்கொடி மிகவும் மோசமானமுறையில் படைஅதிகாரிகளுடன் நடந்துகொண்டார். இந்தச் செயற்பாடானது, ஒட்டுமொத்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தலைக்குனிவை ஏற்படுத்தும் செயற்பாடாகும். ஆகவே அவரை நான் தலைமை வகிக்கும் தேசிய பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிலிருந்து நீக்குமாறு பகிரங்கமானகோரிக்கையை முன்வைக்கின்றேன்.

அதுமட்டுமன்றி, தேசிய பாதுகாப்புபற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் அங்கத்துவத்தினைக் கொண்டுள்ள முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ பிரத்தியேகமாக பாதுகாப்புச் செயலாளர், இராணுவத்தளபதி உள்ளிட்டவர்களை தொலைபேசி வழியாக அழைத்து, நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடியின் வார்த்தைகள் மனதைப் புண்படுத்தியிருந்தால் அவருக்காக தான் மன்னிப்புக்கோருவதாக குறிப்பிட்டுள்ளார்.

அவ்வளவு தூரத்திற்கு சந்திம வீரக்கொடி மிக மோசமாக நடைபெற்றுக்கொண்டிருந்தார் என்பதை சபாநாயகரின் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன். ஆகவே இதுபற்றி கடுமையான நிலைமையிலும் தீர்வு எடுக்கப்பட வேண்டும் என்றார்.

## நீதிபதிக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவா ஜிலிங்கம், சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் சட்டத்தரணி சிறிகாந்தா வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் கஜதீபன், மற்றும் தியாகராஜா நிரோஷ், சேனாதிராஜா கலையமுதன் ஆகியோர் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடிய பின் அடுத்த வாரம் முழு அடைப்புக்கான திகதி அறிவிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

## டிஜிட்டல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகமையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போதும் இதனைத் தெரிவித்தார்.

டிஜிட்டல் பொருளாதார கொள்கையினால் சர்வதேச போட்டித்தன்ஷமிக்க பொருளாதாரத்துடன் போட்டியிடும் வகையில் இலங்கையை தயார்படுத்த முடியும் என்பதால், அதனூடாக அடுத்த தசாப்தத்தில் இலங்கையின் வலுவானபொருளாதாரத்தை கட்டமைப்பதற்கான இயலுமை கிட்டும் என்றும் தெரிவித்தார்.

அதற்காக டிஜிட்டல் பொருளாதார திட்டத்தை சமூகமயப்படுத்தல் மற்றும் அது தொடர்பாக பொதுமக்களைதெளிவூட்டும் செயலமர்வுகளை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத்,

ஜனாதிபதிரணில் விக்ரமசிங்கவின் எண்ணக்கருவுக்கமைவாக 'DIGICOP 2030' வேலைத்திட்டம் இம்மாதம் 11 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தை டிஜிட்டல் மயமாக்குதற்கான, டிஜிட்டல் பொருளாதார திட்டமிடலொன்றை இதனூடாக தயாரிக்க எதிர்பார்த்திருப்பதோடு, டிஜிட்டல் பொருளாதார கொள்கை தயாரிப்பு பணிகள் பிரதமரின் செயலாளர் அனுர திசாநாயக்கவின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

டிஜிட்டல் பொருளாதார திட்டத்தினால் சர்வதேசத்தின் போட்டித்தன்மை மிக்க சூழலுக்குள் இலங்கையை தயார்படுத்த முடியும். அதனூடாக இலங்கைக்குள் வலுவான பொருளாதார கட்டமைப்பை உருவாக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

டிஜிட்டல் பொருளாதாரத்தினால் மொத்த தேசிய உற்பத்திக்கு 4சதவீதம் பங்களிப்பு கிடைக்கிறது. அதனை 2030 களில் 15சதவீதமாக அதிகரித்துக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கமைவாக மாநாடுகளும், செயலமர்வுகளும் நடத்தப்படவுள்ளன.' என்று இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

## தெரிவுக்குழுவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை (06) இடம்பெற்ற அமர்வின் போது சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாடாளுமன்ற உறுப்பினர் அட்மிரல் சரத் வீரசேகர தலைமையிலான தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார்மேற்பார்வைக்குழு நேற்று (நேற்றுமுன்தினம்) நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் கூடியது.

இதன்போது இராணுவத்தின்எண்ணிக்கையை ஒரு இலட்சமாக குறைப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது. நாடுபெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில் பலர் தொழில் வாய்ப்புக்களை இழந்து பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறான நிலையில் அப்பாவிஇராணுவவீரர்களின் தொழில்வாய்ப்புக்களை முடக்கும் வகையில் தீர்மானம் எடுத்தால் அது சமூக கட்டமைப்பில் பெரும் நெருக்கடிகளைஏற்படுத்தும்.

ஆகவே இராணுவ வீரர்களின்எண்ணிக்கையை குறைக்காமல் இராணுவ உயர் அதிகாரிகளின் ஊழல் மற்றும் வீண் செலவுகளை குறைக்க வேண்டும் என்று தெரிவுக்குழுவில் யோசனை முன்வைத்தேன்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு முன்னிலையாகும் அரச அதிகாரிகள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பும் கேள்விகளுக்கு பொறுப்புடன் பதிலளிக்க வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்படகூடாது என நாடாளுமன்ற ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமை தொடர்பானவிதிவிதானங்கள் குறிப்பிடப்பட்டுள்ள போதும் பாதுகாப்புசெயலாளர் உட்பட இராணுவ தளபதி நான் குறிப்பிட்ட விடயத்தை சுட்டிக்காட்டி எனக்கு தெரிவுக்குழுவில் தலைவர் முன்னிலையில்அச்சுறுத்தல் விடுத்தனர்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வை குழுவின் தலைவர் சரத் வீரசேகரவுக்கு நாடாளுமன்ற விதிவிதானங்கள் ஒன்றும் தெரியாது.

நீதவானுக்குஅச்சுறுத்தல் விடுத்த பிரச்சினையில் உள்ளதால் அவர் எனக்கு எதிராக தெரிவுக்குழுவுக்குள் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் குறித்து அவதானம் செலுத்தவில்லை. அத்துடன் தெரிவுக்குழுவுக்குள் பேசப்பட்ட விடயங்களின் குரல் பதிவுகளை வெளியிட வேண்டாம்எனவும்தெரிவுக் குழுவின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார பாதிப்புக்குமத்தியில்இராணுவவீரர்களுக்கான ஓய்வூதிய கொடுப்பனவு பாதிக்கப்பட்டுள்ளநிலையில்இராணுவ உயர் அதிகாரிகளுக்காக அதிகநிதிசெலவிடப்படுகிறது.

பாதுகாப்பு செயலாளர் காலையில் நடைபவணி செல்லும் போது அதிக பாதுகாப்பு வழங்கப்பட்டு மக்கள்நிதிசெலவிடப்படுகிறது. ஆனால் நாட்டு மக்கள் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களை கடுமையாக விமர்சிக்கிறார்கள்.

இராணுவதளபதிமற்றும் பாதுகாப்பு செயலாளர் ஆகியோர்எனக்குஎதிராகஅச்சுறுத்தல் விடுத்தமை நீதிமன்றத்தின் ஊடாக தண்டனைக்குரிய விடயமாகும்.

ஆகவே இவர்களை நாடாளுமன்ற ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமை மீறல் குழுவுக்கு அழைத்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்துகிறேன் -என்றார்.

## எதிர்க் கட்சித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போன்றவற்றால் பாதிக்கப்பட்ட நாடு.

அதனால் இதுதொடர்பாக கருத்திற்கொண்டும் குறிப்பாக கடந்தகால சம்பவங்களால் பாடம் கற்றுக்கொண்டும், இந்த அச்சுறுத்தல் தொடர்பாக பயங்கரவாத விசாரணை பிரிவை அடிப்படையாகக்கொண்டு மிகவும் முறையான வேலைத்திட்டம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும். இந்த பயங்கரவாத அச்சுறுத்தல் தொடர்பாக நாடாளுமன்றத்துக்கு அறிவிப்பொன்றை விடுக்க வேண்டும்.

அத்துடன் இந்த பயங்கரவாத தாக்குதல் அச்சுறுத்தல் தொடர்பான தகவலின் உண்மைத்தன்மை தொடர்பாக மக்கள் தெரிந்துகொள்ள வேண்டி இருக்கிறது. அதனால் இந்த விடயங்களை வெளிப்படுத்த ஆளும் தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேநேரம் பயங்கரவாதத்தை அடக்குவதற்காக சட்டரீதியில்எடுக்கமுடியுமான உச்ச நடவடிக்கைகளை மேற்கொண்டு அரசாங்கம் இதனை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

## புண்ணியத்தைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணிப்போம்.

கேள்வி:- இளம் தலைமைத்துவத்திற்கா அல்லது சிரேஷ்ட தலைமைத்துவத்திற்கா அதிகாரத்தினைப் பெற்றுக்கொடுப்பதற்கு எதிர்பார்க்கின்றீர்கள்?

பதில்:- இளையவர்களும் உள்ளார்கள். சிரேஷ்டத்துவமானவர்களும் உள்ளார்கள். அதனை தீர்மானிப்பது நான் அல்ல. மக்களே தீர்மானிப்பார்கள்.

கேள்வி:- தலைமைத்துவத்தினைவழங்கவுள்ளவர் ராஜபக்ஷ குடும்பத்தினைச் சேர்ந்தவரா?

பதில்:- அதனைக் கூறமுடியாது. மக்களே இறுதியானதீர்மானத்தினை எடுப்பார்கள். அவர்கள் ஏற்றுக்கொள்ளும் தலைமைத்துவத்தினை வழங்குவதற்கு நாம் தயாராகவுள்ளோம்.



# ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரியான அபுஹிந் தொடர்பான தகவல்களை வெளியிட தயார்

## ஹரீஸ் எம்.பி, சபையில் உறுதி



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக சர்வதேச விசாரணையோ நம்பகத்தகுந்த விசாரணை ஒன்றோ இடம்பெறுமாக இருந்தால் தாக்குதலின் சூத்திரதாரியான அபுஹிந் தொடர்பான தகவல்களை வெளியிட நான் தயார் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற துறைமுக அதிகார சபை மற்றும் சிவில் விமான சேவைகள் தொடர்பான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

இந்த சபையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விவாதத்தில் சாய்ந்தமருது தொடர்பில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

அந்த பிரதேசம் தொடர்பில் பிரதீப்சாப் என்ற நபர் சீஐடியில் முறைப்பாடொன்றை முன்வைத்துள்ளார். சாய்ந்தமருது மக்கள் சஹ்ரானுக்கு உதவினர். சஹ்ரானின் பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுத்தனர் என்றும், அதற்காக அரசாங்கம் கல்முனையில் நகரசபையொன்றை ஏற்படுத்திக்கொடுத்துள்ளதாகவும் முறைப்பாடு செய்துள்ளனர்.

ஆனால் சாய்ந்தமருது மக்கள் தேசிய பாதுகாப்புக்கு பெரும் பங்களிப்பு செய்தவர்கள். சஹ்ரானின் குழுவினர் அங்கே இருந்த போது அவர்களை அந்த மக்கள் காட்டிக்கொடுத்து அவர்களை அந்த இடத்திலேயே அழிக்க உதவினர். இதனை நகர சபையுடன் தொடர்புபடுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அத்துடன் இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் இங்கே பேசும் போது இஸ்லாமிய கொள்கை மற்றும் இஸ்லாமிய கோட்பாடு தொடர்பில் தவறான கருத்துக்களை முன்வைத்திருந்தார். அசாத் மௌலான அவர் மீது குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ள நிலையில், அதற்கு பதிலளிக்காது அவர் இஸ்லாமிய கொள்கைகள் தொடர்பில் தவறாக் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய சஹ்ரான் எவ்வாறு புலனாய்வுப்பிரிவினரால் பாதுகாக்கப்பட்டுள்ளார் என்பதையும் கூற வேண்டும்.

அத்துடன் குண்டுத்தாக்குதல் இடம்பெறும் நாள்வரை சஹ்ரான் சுதந்திரமாக நாடு முழுவதும் சுற்ற உதவியுள்ளனர் என்ற சந்தேகங்கள் உள்ளன. சாரா ஜஸ்மின் விவகாரத்திலும் மர்மங்கள் உள்ளன. ஆட்சி மாற்ற தேவைக்காக இவை நடைபெற்றனவா என்ற சந்தேகங்களும் உள்ளன.

அபுஹிந் என்ற நபர் சஹ்ரானுடன் கதைத்துள்ளார் என அவரின் மனைவி விசாரணை ஆணைக்குழுவில் பேசியுள்ளார். அந்த அபுஹிந் யார்? அவர் எங்கிருந்து பேசியுள்ளார் என்பதும் தெரியும். உள்ளக விசாரணையோ, நம்பிக்கை தரக்கூடிய விசாரணையோ இடம்பெறும் போது இந்த அபுஹிந்தின் பின்னணி இந்தத் தாக்குதலின் பின்னணி தொடர்பில் சாட்சியமளிக்க நான் தயாராக இருக்கின்றேன். இதன்படி இந்தத் தாக்குதல் இஸ்லாமிய கொள்கைகளுக்காகவோ, முஸ்லிம் சமூகத்திற்காகவோ உருவாக்கப்பட்டது அல்ல. இரு சிறுபான்மை சமூகங்களுக்கிடையில் முரண்பாட்டை ஏற்படுத்துவதற்கும் அரசியல் நோக்கத்துக்காகவுமே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. - என்றார். (05)



# மீரிகம - நீர்கொழும்பு வீதியில் கோரவிபத்து

## சாரதி உயிரிழப்பு

*மீரிகம - நீர்கொழும்பு வீதியில், கொட்டதெனிய, வெலிஹிந்த சந்தியில் இடம்பெற்ற விபத்தில் பஸ் சாரதி துரதிஷ்டவசமாக உயிரிழந்தார்.*

*நேற்று (வெள்ளிக்கிழமை) காலை மணல் ஏற்றி சென்ற லொறி ஒன்றுடன் தனியார் பஸ் ஒன்று மோதி விபத்துள்ளாகியுள்ளது.*

*குறித்த விபத்தில் பலர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.*

*விபத்தில் லொறி மற்றும் பஸ் ஆகியவற்றின் முன்பகுதி முற்றாக சேதமடைந்துள்ளன. (05)*

# இலங்கையின் இணையவெளி சுதந்திரம் ஓரளவு முன்னேற்றம்

## 'ஃப்ரீடம் ஹௌஸ்' ஸின் அறிக்கை

இலங்கையின் இணையவெளி சுதந்திரம் கடந்தகாலங்களுடன் ஒப்பிடுகையில் 2022 ஜூன் மாதத்தின் பின்னரான காலப்பகுதியில் ஓரளவுக்கு முன்னேற்றமடைந்திருப்பதாக தமது மதிப்பீட்டு அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ள 'ஃப்ரீடம் ஹௌஸ்' அமைப்பு, ஆனால் அதன் பின்னரும் தொடர்ந்த வலுவான கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும், பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பில் இலங்கையர்கள் இணையவெளி பரப்புரையில் ஈடுபட்டனர்; எனத் தெரிவித்துள்ளது.

உலகளாவிய ரீதியில் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதை முன்னிறுத்தி அமெரிக்காவைத் தளமாகக் கொண்டியங்கிவரும் அரச சார்பற்ற அமைப்பான 'ஃப்ரீடம் ஹௌஸ்' இவ்வாண்டில் சர்வதேச நாடுகளின் இணையவெளி சுதந்திரம் தொடர்பான அதன் மதிப்பீட்டு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

2022 ஜூன் 1 - 2023 மே 31 வரையான காலப்பகுதியில் நாட்டின் இணையவெளி சுதந்திரம் எவ்வாறு காணப்பட்டது என மேற்குறிப்பிட்ட அமைப்பால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வின் பிரகாரம், இக்காலப்பகுதியில் இலங்கை பகுதியளவில் இணையவெளி சுதந்திரத்தைக்கொண்டிருந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி 0 (மிகக் குறைந்தளவிலான சுதந்திரம்) - 100 (உச்சபட்ச சுதந்திரம்) வரையான புள்ளியிடலில் இலங்கைக்கு 52 புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன. இணையவெளி அணுகலில் காணப்படும் தடைகள் (மொத்தமாக 25 புள்ளிகள்), பதிவிடும் விடயதானங் களில் மட்டுப்பாடுகள் (மொத்தமாக 22 புள்ளிகள்) மற்றும் பயனாளர்களின் உரிமைகளை மீறும் வகையிலான செயற்பாடுகள் (மொத்தமாக 18 புள்ளிகள்) ஆகிய மூன்று விடயங்களை அடிப்படையாகக்கொண்டு இப்புள் ளிகள் வழங்கப்பட்டுள்ளன. அம்மூன்று விடயங்களில் இலங்கை முறையே 12, 22, 18 ஆகிய புள்ளிகளைப் பெற்றுள்ளது.

மேலும் இந்த ஆய்வு இடம்பெற்ற காலப்பகுதியில் இலங்கையின் இணையவெளி சுதந்திரம் ஓரளவுக்கு முன்னேற்றமடைந்திருந்ததாகவும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த 'அரகலய' உள்ளிட்ட போராட்டங்களை முடக்கும் நோக்கில் அரசாங்கம் சமூகவலைத்தளங்களையும் ஏனைய தொடர்பாடல் மார்க்கங்களையும் முடக்கவில்லை (ஆய்வு இடம்பெற்ற காலப்பகுதியில்) எனவும் ஃப்ரீடம் ஹௌஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

அதேவேளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் இராஜினாமாவை அடுத்து ஜனாதிபதியாகப் பதவியேற்ற ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம், பொய்யான தகவல்களைக் கட்டுப்படுத்துவதற்காக அவசரகால வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்தியதுடன் 'அரகலய' இயக்கத்தைப்பற்றி எழுதிய நிகழ்நிலை செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிராக அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்டதாகவும், நிகழ்நிலை கருத்து வெளிப்பாட்டை மட்டுப்படுத்தக்கூடிய சட்ட வரைவுகளை அறிமுகப்படுத்தியதாகவும் ஃப்ரீடம் ஹௌஸின் மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இவ்வாறான தொடர் கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும், பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பில் இலங்கையர்கள் இணையவெளி பரப்புரையில் ஈடுபட்டதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று நிகழ்நிலை கருத்து வெளிப்பாட்டுச்சுதந்திரத்தை மேலும் மட்டுப்படுத்தக்கூடியவகையில் அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம், ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் சட்டமூலம், நிகழ்நிலை ஊடகங்கள் உள்ளடங்கலாகப் பல்வேறு வழிமுறைகளிலும் பகிரப்படக்கூடிய பொய்யான தகவல்களைக் கட்டுப்படுத்துவதற்காக கடந்த 2022 ஜூலையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகால வழிகாட்டல்கள், இணையவெளி செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பலர் பயங்கரவாதத்தடைச்சட்டம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயச் சட்டம் போன்றவற்றின்கீழ் கைதுசெய்யப்பட்டமை என்பன குறித்தும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# மாணவன் உயிரை பறித்த பாடசாலையின் மின் விசிறி

பாடசாலையில் மின் விசிறி மோதியதில் மாணவனொருவன் உயிரிழந்த சம்பவம் புஸ்ஸல்லாவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

14 வயதான குறித்த மாணவன் வகுப்பறையில் தனது நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த போது, நாற்காலியின் உதவியுடன் மேசையின் மீது ஏறியுள்ளார் எனவும் இதன்போது எதிர்பாராத விதமாக மின்விசிறியில் மோதியுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் படுகாயமடைந்த மாணவர் கம்பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் புஸ்ஸல்லாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)



# குளியாப்பிட்டிய பேருந்து விபத்தில் 35 பேர் காயம்

நிட்டம்புவ மற்றும் குளியாப்பிட்டிய பகுதிகளில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 35 பேர் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இரு விபத்திலும் இலங்கை போக்குவரத்துக்கு சொந்தமான இரு பஸ்களே விபத்திற்குள்ளாகியுள்ளன.

இருவேறு விபத்துகளிலும் 15 பாடசாலை மாணவர்கள் உட்பட 35 இற்கும் மேற்பட்ட பயணிகள் காயமடைந்துள்ளனர்.

நிட்டம்புவ பஸ் விபத்தில் 22 பேரும் குளியாப்பிட்டியவில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 13 பேரும் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# கொழும்பு தேசிய வைத்தியசாலை ஊழியர் வீடு மீது துப்பாக்கிச் சூடு

கந்தானை, பொல்பிதிமுகலான பகுதியில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பணிபுரியும் ஊழியர் ஒருவரின் வீட்டின் மீது வியாழக்கிழமை துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர் ஒருவர் இவ்வாறு பொல்பிதிமுகலான பகுதியிலுள்ள வீட்டின் மீது குறித்த துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார்.

இதன்போது எவருக்கும் காயங்கள் ஏற்படாதவில்லையென பொலிஸார் தெரிவித்தனர். துப்பாக்கிப் பிரயோகத்திற்கு ரிவோல்வர் துப்பாக்கி பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கும் பொலிஸார், சந்தேகநபரை கைது செய்வதற்கான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (05)

# உலக வங்கியின் ஆதரவுடன் கிராமிய வீதிகள் அபிவிருத்தி

*இலங்கையில் உலக வங்கியின் கடன் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வீதி அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 90.98 கிலோமீற்றர் நீளமான வீதி வேலை திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பில் திட்டத்தின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி இராஜாங்க அமைச்சர் சிவனேசதுறை சந்திரகாந்தனுக்கு தெளிவுபடுத்தியுள்ளார். இலங்கையில் வீதிகளை அபிவிருத்தி செய் வது தொடர்பாக உலக வங்கியின் கடன் திட்டத் தின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி மற்றும் கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு வியாழக்கிழமை செத்சிரிபாயவிலுள்ள கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் அலுவலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.*

*மேற்படி வீதி வேலைத் திட்டங்களுக்கான கேள்வி நடைமுறைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன எனத் தெரிவித்த வதிவிட பிரதிநிதி, மிக விரைவில் வீதி வேலைகளை ஆரம்பிப்பதற்கான துரித நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் கூறினார்.*

*இதன்போது கருத்து தெரிவித்த கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மட்டக்களப்பு மாவட்டத்தில் குறிப்பாக யுத்தத்தில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள வீதிகளில் மக்கள் போக்குவரத்து செய்யாமல் உள்ளனர் என சுட்டி காட்டியுள்ளதுடன் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியிலே இப்பகுதி மக்கள் தங்கள் பங்களிப்பை வழங்குவதற்கு வீதிகள் அபிவிருத்தி அத்தியாவசியமானது எனத் தெரிவித்தார்.*

*இந்தக்கலந்துரையாடலில் தற்போது நிறுத்தப்பட்டுள்ள கிராமிய வீதிகள் அபிவிருத்தி திட்டங்களை விரைவாக நிறைவு செய்யவும் மற்றும் எதிர்காலத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள கிராமிய வீதிகள் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)*

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சிறப்பான தீர்ப்பு

சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து அமைச்சர் நசீர் அஹமட் நீக்கப்பட்டதை உயர்நீதிமன்றம் அங்கீகரித்து தீர்ப்பளித்துள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு நாடா–ளுமன்ற உறுப்பினரான நசீர் அஹமட், பின்னர் ஆளும் கட்சிக்குச் சார்பாகச் செயற்பட்டு அமைச்சுப் பதவியையும் வாங்கிக்கொண்டார். அரசமைப்பின் 20ஆவது திருத்தத்திற்கும் ஆதரவளித்தார்.

இதை எதிர்த்து கட்சி அவர் மீது நடவடிக்கை எடுத்தது. அவரைக் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து நீக்கியது. அப்படி நீக்கப்பட்டால் அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியும் சேர்ந்தே இல்லாமல் போகும் என்பதால், கட்சியின் முடிவை எதிர்த்து அவர் நீதிமன்றத்தை நாடினார்.

தனக்குக் கட்சியின் யாப்புத் தெரியாது என்றும், அது தனக்கு வழங்கப்படவில்லை என்றும் கூறிய அவர், வரவு செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிப்பதாக கட்சி எடுத்த முடிவு தனக்கு அறிவிக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார். இந்த விளக்கங்கள் மூலம் கட்சி தன்மீது எடுத்த நடவடிக்கை தவறு என்று நிரூபிக்க அவர் முயன்றார். ஆனால், அவரது விளக்கத்தை ஏற்றுக்கொள்ள மறுத்த உயர் நீதிமன்ற அமர்வு, கட்சியின் நடவடிக்கை சரி என்று தீர்ப்பளித்துள்ளது.

பதவிகளுக்காக கட்சி தாவுபவர்களுக்கு சம்மட்டியடியாக இந்தத் தீர்ப்பு வந்திருக்கிறது. அதனாலேயே இதனை சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பென நாடாளுமன்ற உறுப்பினரும் இந்த வழக்கில் கட்சியின் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன். 25 வருடங்களுக்குப் பின்னர் கிடைத்திருக்கக்கூடிய தீர்ப்பு இது என்றும் குறிப்பிட்டார்.

”25 வருடங்களாக கட்சி மாறுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் நீதிமன்றத்தில் தங்களுக்கு சாதகமான தீர்ப்புகளைதான் பெற்று வந்திருக்கிறார்கள். அதற்கு மாறுபட்ட ஒரு தீர்ப்பாகவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தலைவராகச் செயற்பட்டு அப்பதவியிலிருந்தும், அடிப்படை உறுப்புரிமையிலிருந்தும் நீக்கப்பட்ட நசீர் அஹமட் வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு அமைந்துள்ளது” என்றார் சுமந்திரன்.

கட்சிமாறுகின்றவர்களுக்குஇதுவொருமுன்னெச்சரிக்கை என்றும் அவர் தெரிவித்தார். அமைச்சுப் பதவிக்காக கட்சி மாறுபவர்களுக்குஉயர்நீதிமன்றத்தின்தீர்ப்புஎச்சரிக்கையாக இருக்குமென லங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தெரிவித்தார்.

ஒரு கட்சியின் சார்பில் தேர்தலில் நின்று மக்களின் ஆதரவைப் பெற்று வென்ற பின்னர் பதவிகளுக்காவோ வேறு எந்த நோக்கங்களுக்காகவே கட்சி தாவுபவர்களுக்கு ஓர் அச்சத்தை, பதற்றத்தை இந்தத் தீர்ப்பு வழங்கியிருக்கும் என்பது உண்மைதான். இருந்தாலும், எப்போதுமே இப்படி கட்சிகளுக்குச் சாதகமான தீர்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. அதற்குக் கட்சிகளும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி தாவும் சந்தர்ப்பங்களும் முக்கிய காரணம்.

நாடாளுமன்றஉறுப்பினர்சுமந்திரன்சொல்வதைப்போன்று, இது 25 வருடத்திற்கொருமுறை அத்தி பூத்தாற்போன்று வரக்கூடிய ஒ–ரு தீர்ப்பு. இதனை வைத்து கட்சி தாவிய எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பதவி நீக்க முடியும் என்று எதிர்பார்க்க முடியாது. அப்படி நடந்தால் நன்றாகத்தான் இருக்கும் என்றாலும் யதார்த்தம் அதற்கு இடம்கொடுக்காது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் இப்படிப் பதவிக்காக கட்சி தாவுவதற்கு அவர்கள் மட்டுமே காரணமல்லர் என்பதையும் ஏற்றாகவேண்டும். கட்சிகளுக்குள் உள் ஜனநாயகம் காணப்படாமையும் முக்கிய காரணம். தலைமைகள் மற்றையவர்களின் கருத்துக்களைக் கேட்டு கலந்துரையாடி முடிவெடுக்காமையும் ஒரு காரணம் என்பதையும் மறுக்க முடியாது. எனவே திருந்த வேண்டியவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல கட்சிகளும்தான் என்பதை மனதிலிருத்த வேண்டும்.

எப்படியிருந்தாலும் இந்தத் தீர்ப்பு வரலாற்றுச் சிறப்பு மிக்கதுதான். கட்சிதாவினால்எம்மைஎதுவும்செய்யமுடியாது என்கிற மமதையிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களை மீட்டு நஸீருக்கு நடந்தது எமக்கும் நடந்துவிடுமோ என்கிற அச்சத்தை ஏற்படுத்திய வகையில் வரவேற்கத்தக்க தீர்ப்புத்தான்.




# வினைத்திறனான பயிர் உற்பத்திக்கு மண் பரிசோதனை முக்கியம்

விவசாயத்துறையின் பரிணாமவளர்ச்சியில் மண்ணினை பரிசோதித்து அதனடிப்படையில் இடப்படவேண்டிய பசளைகளை பரிந்துரை செய்வது என்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும். மண் பரிசோதினை செய்யாமல் பசளைகளினை இடுவதன் மூலம் வினைத்திறனான பயிர் உற்பத்தியினை மேற்கொள்வது கடினமாகும்.



### மண் பரிசோதனையின் முக்கியத்தவங்கள்

1. மண்ணின் வளத்தினை அறிதல்:

மண்ணில் தாவரங்களிற்குத் தேவையான போனைக்கூறுகள் எவ்வளவுஉண்டுஎன்பதனையும் அவற்றில் எவ்வளவு தாவரங்களிற்குக் கிடைக்கக்கூடிய நிலையில் உள்ளது என்பதனையும் ஆராய்ந்து அறிந்து கொள்ளுதல்

2. மண்ணின் அமில கார மற்றும் உவர் நிலமைகளை கண்டறிதல். மண்ணின்அமிலகார தன்மையானது மண் கரைசலின் பி.எச். (PH) பெறுமானத்தினை அளவிடுவதன் மூலம் கண்டறியப்படுகின்றது. பொதுவாக வினைத்திறனான பசளை உபயோகத்திற்கு மண் கரைசலின் பி.எச். பெறுமானமானது நடுநிலையானதாகக் காணப்படல்வேண்டும். அச் சிறப்பான பி.எச். வீச்சானது 6.5-7 வரையானதாகும். மண் பரிசோதினையின் முதற்கட்டமாக மண்ணின் அமில கார தன்மை பிஎச் மானியின் உதவியுடன் அளவிடப்படுகின்றது.

2.1. மண் கரைசலின் பிஎச் பெறுமானமானது 5.5 இனை விடக் குறைவடையும்போது அது அமில மண்ணாகக் கருதப்படுகின்றது. அதிகளவு மழைவீழ்ச்சி கிடைக்கின்ற ஈர வலயப் பிரதேசங்களில் மண் அமிலமடைதல் பெரும் பிரச்சினையாகக் காணப்படுகின்றது. பி.எச். பெறுமானம் 5.5 இலும் குறைந்த மண் ணிற்கு சுண்ணாம்பு அதாவது நீறிய சுண்ணாம்பு (CaO) அல்லது நீறாத சுண்ணாம்பு (Ca(OH)2) அல்லது டொலமைற் (CaCO3.MgCO3) பரிந்துரை செய்யப்படுகின்றது. இந் நிலமை பொதுவாக ஈர வலயப் பிரதேசங்களில் அதிக மழை பெய்வதனாலும் மண் மேற்படையில் காணப்படும் உப்புக்கள் கழுவிச் செல்லப்படுவதனாலும் உப்புக்கள் நிலத்திற்கு கீழ் ஆழ ஊடுவடிந்து செல்வதனாலும் ஏற்படுகின்றது.

2.2. மண் கரைசலின் பி.எச். பெறுமானமானது 8 இனைவிட அதிகரிக்கின்ற போது மண்ணானது காரத்தன்மையினை அடைகின்றது. வறட்சியான உலர் காலநிலை நிலவும்போது மண்ணீரானது ஆவியாகிச் செல்வதனால் மண் மேற்பரப்பில் கார உப்புக்கள் படிவடைவதனால் இந்நிலைமை ஏற்படுகின்றது. இந் நிலைமையினை நிவர்த்தி செய்ததன் பிற்பாடு பயிர்ச்செய்கையினை ஆரம்பிப்பதன் மூலம் சிறந்த பயனைப் பெறலாம். அதாவது மண் பரிசோதனை அறிக்கையில் மண்ணானது காரத் தன்மை அடைந்துள்ளது எனின் அதனை நிவர்த்தி செய்வதற்காக ஜிப்சம் பரிந்துரை செய்யப்படுகின்றது.

மண் கூழ்நிலைச் சிக்கலில் உள்ள கார உப்புக்கள் ஜிப்சத்தில் உள்ள Ca2 அயனினால் மாற்றீடு செய்யப்பட்டு மண் கரைசலினுள் விடப்படுகின்றது. மண் கரைசலினுள் ஜிப்சத்தில் உள்ள Ca2 அயன்களினால் மாற்றீடு செய்–யப்பட்டகாரஉப்புக்களினைகழுவி அகற்றுவதன் மூலம் அல்லது மண் வேர் வலயத்திற்கு கீழாக ஆழ ஊடுவடிய விடுவதன் மூலம் கார நிலைமை குறைக்கப்பட்டு, மண்ணின் பி.எச். பெறுமானம் நடுநிலைக்குக் கிட்டயதாகக் கொண்டுவரப்படுகின்றது.

2.3. அடுத்து மண்ணின் உவர்த் தன்மையினைக் கருதுவோமாயின் மண்ணின் மின்கடத்தாறு அதாவது மண் கரைசலில் அதிக உப்புக்கள் காணப்படின் மண் கரைசலின் மின் கடத்தும் தன்மையின் அளவும் சற்று அதிகமாகக் காணப்படும். இதனால் மண்ணின் உவர் நிலைமையினைக் கண்டறிய மின் கடத்தாறுமானி உபயோகப்படுத்தப்படுகின்றது. பொதுவாக 0.4-S/m என்ற வாசிப்பினைவிட அதிகமாக மின் கடத்தாறு காணப்படுமாயின் அது உவர்த்தன்மையுள்ள மண்ணாகக் கருதப்படுகின்றது. உவர்த்தன்மையுள்ள மண்ணில் சிறப்பான விளைச்சலினைப் பெறுவது கடினமாகும்.

ஏனெனில், தாவரவேரின் கலங்களிலுள்ள கலச்சாறின் உப்புச்செறிவினைவிட மண் கரைசலின் உப்புச்செறிவானது அதிகரிக்கின்றபோது அவ்விடத்தினை நடுநிலைமையாக்கும் முயற்சியாக தாவரத்தில் இருந்து நீரானது புறப்பிரசாரணத்தின் (Reserve Osmosis) மூலம் மண் கரைசலினுள் வெளியேறுகின்றது. இதனால் தாவரம் வாடலடையத் தொடங்குகின்றது. பயிரிடப்படும் நிலமானது தொடர்ச்சியாக உவர்த் தன்மையுள்ள நீரினால் நீர்ப்பாசனம் செய்யப்படுதல், மழைவீழ்ச்சி குறைவாகக் காணப்படுதல், அதிக வறட்சி, கடற்கரைக்கு அண்மித்த பிரதேசங்களில் ஏற்படும் கடற்பெருக்கு, கடற்காற்றின் மூலம் உப்புக்கள் படிவடைதல் என்பன நிலம் உவரடைய ஏதுவான காரணங்களாகும். உவரடைந்த மண்ணினை நிவர்த்தி அல்லது பரிகரணம் செய்யும்போது முதலில் மண்மேற்பரப்பில் படிவடைந்துள்ள உப்புப் பளிங்குகள் மண்வெட்டியினால் வழித்து அகற்றப்படுதல் வேண்டும். அத்தோடு உவர்த் தன்மையற்ற நீரினால் வயலினை நீர் நிரப்பிக் கட்டி அந் நீரினை வெயியேற்றுவதன் மூலம் உப்புக்களை கழுவியகற்றுதல் வேண்டும் அல்லது உவரற்ற நீரினால் வயலினை நிரப்பி ஆழ ஊடுவடியவிடுவதன் மூலம் உப்புக்களை வேர்வலயத்திற்குக் கீழாக கொண்டுசெல்லல் வேண்டும். மற்றும் உவர்த் தன்மையினைத் தாங்கி வளரக்கூடிய பயிர்ப்பேதங்களைப் பயிரிடுதல் - உதாரணமாக நெற்பயிரைப் பொறுத்தவரை Bg369, Bg310, At354, At401 போன்ற நெல்லினங்கள் உவர்த்தன்மையினை சகித்து வளரக்கூடிய நவீன நெல் வர்க்கங்களாகும்.

3. பயிர் உபத்தியினை உத்தம மட்டத்தில் பெற்றுக்கொள்வதற்காக பசளைச் சிபார்சினை பெறுதல்

தாவரத்தினால் மண்ணிலுள்ள போசனைக்கூறுகள் உறுஞ்சப்படுவதுடன் அறுவடையின் போதும் அகற்றப்படகின்றது. ஒருபோக அறுவடை முடிந்தவுடன் மண்ணிலுள்ள போசனைக் கூறுகள் அவற்றிலும் பொதுவாக மாபோசனை மூலக்கூறுகள் குறைவடைந்து காணப்படும். எனவேதான், மண் ணில் காணப்படுகின்ற கிடைக்கக்கூடிய போசனைக்கூறுகளின் அளவினை பரிசோதனை செய்து அதனுடன் தேவைப்படுகின்ற போசனைக்கூறுகளின் அளவானது சிபார்சு செய்யப்படுகின்றது. இவ்வாறு சிபார்சு செய்யப்பட்ட அளவில் பசளைகளினை இடுவதன் மூலம் பயிருற்பத்தியினை உத்தம மட்டத்தில் பேணிக் கொள்ளலாம்.

3.1. மாபோசனை மூலக்கூறுகளில் நைதரசன் (N) ஆனது தாவர வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமான தேவையுடைய மூலகமாகும். தேவையான நைதரசன் (N) பசளையானது தாவரத்தின் வாழ்க்கை வட்டத்தில் பகுதி பகுதியாகப் பிரித்து

(5ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர்
Kalaikkathir

# வினைத்திறனான பயிர் உற்பத்திக்கு..........

வழங்கப்படுகின்றது (Split application) , ஏனெனில் நைதரசன் (N) பசளையினை இட்டவுடன் தாவரம் அகத்துறிஞ்தியது போக மேலதிகமான பசளை ஆவியாகவும் (Volatilization) நிலத்தடி நீருடன் கலந்தும் (Leaching loss) வீணாகிச் செல்வதற்கான வாய்ப்பு உள்ளது. எனவேதான், ஒரு போகத்திற்குத் தேவையான நைதரசன் (N) பசளையானது பயிரின் வாழ்க்கைக் காலத்தில் பகுதி பகுதியாக அப்பயிரின் வளர்ச்சிப் பருவதற்கு தேவையான அளவில் இடப்படுகின்றது. அத்தோடு நைதரசன் (N) பசளையினை இடும்போது அதிக சூரிய ஒளி உள்ள நேரத்தில் இடக்கூடாது. ஏனெனில் ஆவியாக வீணடைவதை குறைத்துக்கொள்ளமுடியும் (Reduce the surface Volatilization). அத்தோடு, யூரியா/ அமோனியம் சல்பேற் போன்ற பசளையினை மண்ணிற்கு இடும்போது மண்ணானது ஈரலிப்பாக அதாவது வயற்கொள்ளளவு நிலையில் காணப்படவெண்டும். மேற்கூறிய நடைமுறைகளை அதாவது நைதரசன் (N) பசளையினை சிபார்சு செய்யப்பட்டமைக்கு அமைவாக சரியான அளவில் பகுதி பகுதியாகப் பிரித்து, தாவரத்தின் வேர் வலயத்தினை (root zone) அண்மித்த பகுதியில், அதிக சூரிய வெப்பமில்லாத நேரத்தில், மண்ணானது ஈரலிப்பு நிலையில் காணப்படும் போது, அதாவது சரியான இடத்தில், சரியான நேரத்தில், பசளைச் சிபார்சின் அடிப்படையில் சரியான பசளை மூலத்தினை சரியான அளவில் மண்ணுடன் கலந்து விடுவதன் மூலம் பசளைப் பயன்பாட்டு வினைத்திறனை (fertilizer use efficiency) அதிகரித்துக்கொள்ள முடியும். இது நவீன ஒருங்கிணைந்த பசளைப் பயன்பாட்டு வினைத்திறன் கொள்கையின் 4சு எண்ணக்கருவின் மூலம் விளக்கப்படுகின்றது.

அத்துடன் அசேதனப் பசளையினை சேதனப் பசளையுடன் இணைத்து உபயோகிப்பதன் மூலம் பசளைப் பயன்பாட்டு வினைத்திறனானது அதிகரிக்கப்படுகின்றது. பொதுவாக கூட்டெருவானது 1 ஏக்கருக்கு 4 தொன் என்ற அளவில் நிலம் பண்படுத்தலின் போது இடப்படுகின்றது. இவ்வாறு சேதனப் பசளையினை இடுகின்ற போது மண் வளமானது அதிகரிக்கப்படுவதுடன் மண்ணுடன் பசளையினை பிடித்துவைக்கின்ற தன்மையும் அதிகரிக்கின்றது. பொதுவாக மணல் அதிகம் காணப்படுகின்ற மண்ணில் போசனைக் கூறுகள் இலகுவாகக் கழுவிச் செல்லப்படுகின்றது. இவ்வாறான மண்ணிற்கு சேதனப் பசளையினை இடுவதன் மூலம் மண்ணின் கட்டமைப்பு (soil structure) மேம்படுத்தப்படுவதுடன் மண்ணுடன் பசளையினை பிடித்துவைக்கின்ற தன்மையான கற்றயன் மாற்றீடு குணகமும் (Cafion Exchange Capacity) அதிகரிக்கப்படுகின்றது. தற்கால நவீன போக்கில் இலையின் நிறக்குறி காட்டியினை பயன்படுத்தியும் நைதரசன் (N) பசளை இடுகின்ற நடைமுறை காணப்படுகின்றது. அதாவது இலை நிறக்குறி காட்டியில் (|åB¨å »w¦w«A »hBÄk) இளம்பச்சை நிறத்தில் இருந்து கடும் பச்சை நிறம் வரை நான்கு பட்டிகைகள் காணப்படுகின்றது - உதாரணமாக நெற்பயிரில் மட்டம் பெயர்தல் ஆரம்பம் (Leave Colour Chart) தொடக்கம் கதிர் உருவாகி (tillering stage) 5 - 10 நாட்கள் வரை 7 - 10 நாட்களுக்கு ஒரு தடவை ஒவ்வொரு தடவையும் 10 இலைகளினை தெரிவுசெய்து பச்சை நிறத்தினை அளவிட்டு சராசரி அளவினைப் பெறுதல் வேண்டும். இச் சராசரிப் பெறுமானம் 3 இனை விடக் குறைவாகக் காணப்படின் மேற்கட்டுப் பகளையாக நைதரசன் (N) பசளை இடப்பட வேண்டும். 3.2. அடுத்து இன்னுமொரு மாபோசனை மூலகமான பொசுபரசு (P) பசளையினை நோக்குவாமாயின் இது அடிக்கட்டுப் பசளையாக இடப்படவேண்டிய பயிரின் ஆரம்ப வேர் வளர்ச்சிக்குத் தேவையான பசளையாகும். பயிர்ச் செய்கையினை ஆரம்பிப்பதற்கு முன்னரே மண்ணில் காணப்படுகின்ற கிடைக்கக் கூடிய பொசுபரசு (P) அளவானது பரிசோதிக்கப்பட்டு தேவைப்படுகின்ற அளவில் பொசுபரசு (P) பசளையானது இடப்பட வேண்டும். பொதுவாக TSP என அழைக்கப்படும் மும்மை சுப்பர் பொஸ்பேற் (Triple Super Phosphate), SSP என அழைக்கப்படும் ஒருமை சுப்பர் பொஸ்பேற் (Single Super Phosphate) என்பன ஓராண்டு பயிர்களுக்கு இடப்படுகின்றது. பாறை பொஸ்பேற் (Roack Phosphate) AAiயானது கரைதிறன் மிகவும் குறைவான பசளையாகும். எனவே, இப் பாறைப் பொஸ்பேற் (Roack Phosphate) பல்லாண்டு பயிர்களுக்கே உகந்தது ஆகும்.

3.3. மூன்றாவது முக்கிய மாபோசனை மூலகமான பொற்றாசியம் (மு) மூலகத்தினை நோக்குவோமாயின் இது தாவரத்தின் ஒளித்தொகுப்பு செயன்முறைக்குத் தேவையான இலைவாய் திறந்து மூடும் செயன்முறைக்கு தேவையான மூலகமாவதுடன் தாவரத்தின் முக்கியமான உயிரிரசாயன செயன்முறைக்கும், நீர் கனியுப்புக்களை கடத்துவதற்கும், புரதம், மாப்பொருள் தொகுப்பிற்கும், இன்றியமையாத மூலகமாவதுடன் தாவரத்தினை நோய் தாக்குவதிலிருந்தும் தகாத காலநிலை நிலைமைகளிலிருந்தும் (Imunize Abiotic Stress) தாவரத்தினை பாதுகாப்பதுடன் நெற்பயிர்கள் பாட்டத்தில் வீழ்வதிலிருந்து பாதுகாப்பதற்கும் பொற்றாசியம் (மு) பசளை முக்கியமானதாகும். பொற்றாசியம் லு) பசளை பாவனை வினைத்திறனை அதிகரிப்பதற்காக சரியான நேரத்தில், சரியான அளவில் இடப்படல் வேண்டும். பொதுவாக மியூரியேற்று பொட்டாசு (MOP) பயன்படுத்தப்படுகின்றது.

4. சுற்றாடல் பிரச்சினைகளை குறைப்பதற்காக சிபார்சு செய்யப்பட்ட அளவினை விட மேலதிகமாக நைதரசன் (N) பசளையினை இடும் போது நைத்திரேற்றானது ( (MOP) நிலத்தடி நீருடன் கலக்கின்றது. இதனால் குடிநீரில் காணப்படவேண்டிய அதிகூடிய நைத்திரேற்று அளவானது (Maximum contaminated level of Nitrate) 10mg/L என்ற அளவினை விட அதிகரிக்கின்றது. இதனால் methemoglobinemia என்ற நீலக்குழந்தை பிறப்பு நோய் மற்றும் ஏனைய தொற்றா நோய்களும் ஏற்பட வாய்ப்பிருக்கின்றது. எனவேதான், சரியான அளவில் நைதரசன் (N) பசளையினை இடுதல் என்பது முக்கியமானதாகும். அத்தோடு அளவுக்கதிகமாக நைதரசன் பசளையினை இடுவதனால், தாவரத்தின் பதியப் பகுதிகள் மிக சொகுசான (விற்உஉற்யிழிஜமி) ஆக வளர்வதனால், இலகுவில் பூச்சி, பீடைகளின் தாக்கத்திற்கு உள்ளாகக்கூடிய வாய்ப்பும் ஏற்படுகின்றது. இதனைத் தவிர்த்து உத்தம விளைச்சலை பெறுவதற்காகவும் பசளையினை சரியான அளவில் இடுதல் கட்டாயமாகின்றது. மண் பரிசோதனை செய்யாது அதிகப்படியான பொசுபரசு (P) பசளையினை இடும் போது தாவரத்தினால் நைதரசன் (N) இனை அகத்துறுஞ்சும் தன்மையில் குறைவு ஏற்படுவதோடு நாகம் (Zn) இரும்பு (Fe) போன்ற நுண் போசனை மூலக் கூறுகளும் தாவரத்தினை அகத்துறுஞ்சப்படாத நிலைக்கு மாற்றப்படுவதனால் இவற்றில் போசனைக்குறைபாடுகளும் ஏற்பட இடமளிக்கின்றது. முக்கியமான சூழற்பிரச்சினையாகவுள்ள Eutrophication அதாவது நற்போசனையாக்கம் ஆனது அதிகப்படியான நைதரசன் (N), பொசுபரசு (உண) பசளைகளின் பாவனையினால் ஏற்படுகின்றது. இவ்வாறு அதிகப்படியான நைத்திரேற்றானது ($NO_3$) மற்றும் பொஸ்பேற்று ($PO_4^{2-}$) நீர் நிலைகளினை அடைவதினால் அங்கு அல்கா மலர்தலைத் தூண்டுகின்றது. இதனால் அதிகப்படியான காபனீரொட்சைட்டு ($CO_2$) நீர் நிலைகளில் விடப்படுவதோடு நீரில் கரைந்துள்ள ஒட்சிசன் ($O_2$) அளவும் குறைவடைகின்றது (dissolved Oxygen depletion) . இதன் விளைவாக நீர் வாழ் உயிரினங்கள் அழிவடைய நேரிடுகின்றது. அதிகூடிய பொற்றாசியம் (K) பசளையினை இடுவதனால் ஏனைய அயன்களினை அகத்துறுஞ்சும் தன்மையம் பாதிக்கப்படுகின்றது.

5. பசளைக்காக செலவிடப்படும் அந்நியச் செலாவணியைக் குறைத்துக்கொள்வதற்காக பொதவாக இரசாயனப் பசளைகள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது. இவற்றிற்காக, பெருமவான அந்நியச் செலாவணி செலவிடப்படுகின்றது. எனவே தான், சரியான அளவில் இப் பசளைகளினை சேதனப் பசளைகளுடன் கலந்து இடுவதகால் இவற்றிற்கான செலவீணத்தினைக் குறைத்துக் கொள்ளலாம்.

மேற்கூறப்;பட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்குமான எளிமைமான தீர்வாக, பயிரிட முன்னர் மண் பரிசோதனை செய்து அந் நிலத்தில் அத் தாவரங்களிற்கு என சிபார்சு செய்யப்பட்ட இரசாயனப் பசளைகளினை சேதனப் பசளைகளுடன் கலந்து சரியான மூலத்தினை (right source) சரியான இடத்தில் (right place) சரியான அளவில் (right amount) சரியான நேரத்தில் இடுவதன் மூலம் மண்ணின் நிலைபேறான வளத்தினை பாதுகாப்பதுடன், சமூக மட்டத்தில் பொருளாதார விளைவினை கருத்திற் கொண்டு சூழலிற்குப் பொருத்தமான தாவர போசனை முறைமையினை பின்பற்றுவதன் மூலம் தாவரங்களினை முறையாகப் பயிர்செய்து அதியுயர் பலனினைப் பெற்றுக்கொள்ளலாம்.

நி. பமித்திரா, நெல் ஆராய்ச்சி நிலையம் - முருங்கன்




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மாத்தறை மக்களுக்கு நிவாரணம்

## ஜனாதிபதி பணிப்பு



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாத்தறை மாவட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

நாட்டில் நிலவிவரும் மழையுடனான காலநிலை காரணமாக, மாத்தறை மாவட்டத்தில் 2113 குடும்பங்களைச் சேர்ந்த 8591 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், மாத்தறை மாவட்ட மக்களின் தேவைகளைக் கண்டறிந்து அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு மாத்தறை மாவட்ட செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

அந்த மக்களுக்கு அவசியமான சமைத்த உணவு மற்றும் மருந்து போன்ற அத்தியாவசிய வசதிகளைக் குறைவின்றி வழங்குமாறும் அதற்காக பொலிஸார் மற்றும் முப்படையினரின் ஒத்துழைப்பைப் பெறுமாறும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மேலும், எதிர்காலத்தில் வெள்ளப்பெருக்கு அதிகரிக்கும் பட்சத்தில் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான முன்னாயத்தங்களை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி சம்பந்தப்பட்ட துறையினர்களுக்கு அறிவித்துள்ளார். (05)

# உணவு பற்றாக்குறை ஏற்படும் அபாயமாம்

## மஹிந்த அமரவீர எச்சரிக்கை

திடீர் காலநிலை மாற்றம் காரணமாக நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் எழுந்துள்ளதாக விவசாய அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்ட விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மழையால் தாழ்வான பகுதிகளில் மரக்கறிப் பயிர்களும் சேதமடைந்துள்ளன என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பயிரிடப்பட்டிருந்த சுமார் 15,000 ஏக்கர் வெண்டைக்காய் தோட்டங்கள் முற்றாக அழிந்து விட்டன எனவும், நாட்டின் மொத்த வெண்டைக்காய் தேவையில் 40 சதவீதத்தை இந்த பயிர்ச்செய்கை மூலம் பெற்றிருக்க முடியும் என்றும் விவசாய அமைச்சர் ஜதிவித்தார்.

அண்மைய நாள்களாக நிலவி வரும் கடும் வரட்சி காரணமாக சுமார் 70,000 ஏக்கர் நெற் செய்கை அழிவடைந்துள்ளதாகவும், தற் போது பல மாகாணங்களில் பெய்து வரும் அடை மழை காரணமாக அறுவடைக்கு தயாராகவிருந்த நூற்றுக்கணக்கான ஏக்கர் நெற்பயிர் பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (05)

# தங்கம் வென்ற தருஷிக்கு 10 மில்லியன் ரூபா பரிசில்

## இலங்கை கிரிக்கெட் சபை தீர்மானம்



19 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் தங்கம் வென்ற தருஷி கருணாரத்னவுக்கு 10 மில்லியன் ரூபாவை வழங்க இலங்கை கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது.

19 வயதான அவர், சீனாவின் ஹாங்சோவில் நடைபெற்று வரும் கான்டினென்டல் மல்டி ஸ்போர்ட்ஸ் போட்டியில் பெண்களுக்கான 800 மீற்றர் தோற்றத்தை 2.03.20 நிமிடங்களில் கடந்து தங்கப் பதக்கத்தை வென்றார்.

21 ஆண்டுகளுக்குப் பிறகு நாட்டிற்காக முதல் ஆசிய விளையாட்டு தடகள தங்கப் பதக்கத்தை வென்று வரலாறு படைத்த தருஷி கருணாரத்னவுக்கு கிரிகெட் சபை பாராட்டு தெரிவித்துள்ளது.

தருஷி கருணாரத்ன 2019 ஆம் ஆண்டு அகில இலங்கை பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் 400 மீற்றர் மற்றும் 800 மீற்றர் போட்டிகள் இரண்டிலும் தங்கப் பதக்கம் வென்றார். (05)



# அதிவேக நெடுஞ்சாலை சுங்கச்சாவடி கேட் மைத்திரியின் கார் மீது விழுந்தது

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வாகனத்தின் மீது சுங்கச்சாவடி கேட் விழுந்த சம்பவம் குறித்து வி.ஐ.பி. பாதுகாப்புப் பிரிவு விசாரணையைத் தொடங்கியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புதன்கிழமை காலை மத்திய அதிவேக நெடுஞ்சாலை ஊடாக பயணம் செய்த போது இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முன்னாள் ஜனாதிபதியின் கார் மீது டோல் கேட் விழுந்துவிபத்துக்குள்ளானது இது இரண்டாவது சந்தர்ப்பம் எனத் தெடுள்ளது.

இரண்டு முறையும் பணியில் இருந்தது ஒரே அதிகாரியா அல்லது இது தற்செயலானதா என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது. (05)





JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர் Kalaikkathir

# ஆசிரியர்களின் உரிமைகளைப் பாதுகாக்க எனது ஆட்சி அர்ப்பணிப்பாகச் செயற்படும்

## ஜனாதிபதி திடசங்கற்பம்




ஆசிரியர்களின்உரிமைகளை பாதுகாப்பதோடு, சமூகத்தில் அவர்களுக்கு கிடைக்கவேண்டிய உயரிய அந்தஸ்தை வழங்கவும் அரசாங்கம் அர்ப்பணிப்பாக செயற்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று (வெள்ளிக்கிழமை) வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு -

தற்போதுள்ள சவால்களை எதிர்கொண்டு பிள்ளைகளின் அறிவு வளர்ச்சிக்காகப் போராடும் நாட்டிலுள்ள ஆசிரியர்கள் அனைவருக்கும் சர்வதேச ஆசிரியர் தின வாழ்த்துக்களைக் கூறிக்கொள்ளும் அதேநேரம், ஆசிரியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதோடு, சமூகத்தில் அவர்களுக்கு கிடைக்கவேண்டிய உயரிய அந்தஸ்தை வழங்கவும் அரசாங்கம் அர்ப்பணிப்பாக செயற்படும். -எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# 83 வயது முதியவர் ஏறாவூரில் கைது

## சிறுமியை பலாத்காரம் செய்த குற்றச்சாட்டில்

மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்தில் 9 வயது சிறுமியை பாலியல்துஷ்பிரயோகம் செய்த 83 வயதுடைய முதியவரைபுதன்கிழமை மாலை கைதுசெய்-துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்திலுள்ள 9 வயது சிறுமி மீது 83 வயதுடைய முதியவர் பாலியல் சேட்டை புரிந்துள்ள நிலையில், பாதிக்கப்பட்ட சிறுமி தனக்கு நடந்ததை பெற்றோரிடம் தெரிவித்துள்ளார்.

அதனையடுத்து, சிறுமியின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

அதன் பின்னர், குறித்த முதியவரை அவரது வீட்டில் வைத்து பொலிஸார் கைது செய்ததுடன், சிறுமியை வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

மேலும், கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (05)





# வேட்டைக்குசென்ற நான்கு பேர் கைது

தப்போவ சரணாலயத்தில் வேட்டைக்குச் சென்ற நான்கு பேர் வனவிலங்கு உத்தியோகத்தர்களினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தப்போவ சரணாலயத்தின் கம்பிரிகஸ்வெள பகுதியில் வேட்டைக்குச் சென்ற நால்வர் வில்பத்து விலங்கு அலுவலகத்துக்கு உரித்தான நீலபெம்ம வனவிலங்கு உத்தியோகத்தர்களால் புதன்கிழமை பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் 3 ரவைகள் கத்திகள் மின்விளக்குகள் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன என வனவிலங்கு உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் வேட்டையாடிய மான் இறைச்சி மற்றும் எறும்புண்ணை இறைச்சிகளும் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நால்வரும் பகல புலியாங்குளம் பகுதியைச் சேர்ந்தவர்களென வனவிலங்குகள் உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள்நால்வரையும் புத்தளம் நீதிமன்றில் நேற்று ஆஜர்படுப்பட்டனர்.

இதன்போது ஒவ்வொருவொருக்கும் ஒரு லட்சம் ரூபா சரீர பிணைப்படி நால்வருக்கும் நான்கு லட்சம் ரூபா சரீர பிணையில் விடுவிக்கப்பட்டனர். (05)

# கூட்டு ராணுவ பயிற்சி குறித்து கொரியா- இலங்கை ஆராய்வு

இலங்கைக்காக கொரிய தூதுவர் மியோன் லீ மற்றும் பாதுகாப்பு செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் கமல் குணர்தன ஆகியோருக்கிடையில்சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. வியாழக்கிழமை கோட்டை ஸ்ரீ ஜயவர்தனபுரவில் அமைந்துள்ள பாதுகாப்பு அமைச்சில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது புதுடில்லியில் உள்ள கொரிய தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கப்டன் (கடற்படை) சோய் யோங்சோக் சமுகமளித்திருந்தார்.

பாதுகாப்பு அமைச்சுக்கு வருகை தந்த கொரிய தூதுவரை ஜெனரல் குணரத்ன அன்புடன் வரவேற்றார். தொடர்ந்து நடைபெற்ற சுமுகமான கலந்துரையாடலின் போது இரு நாடுகளுக்குமிடையில் தற்போதுள்ள உறவுகளை மேலும் வலுப்படுத்து-வது மற்றும் பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் கூட்டாண்மைக்கான தமது உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துவது தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் குணரத்ன, இரு நாடுகளுக்கும் இடையே கூட்டு இராணுவப் பயிற்சிகள் மற்றும் பாதுகாப்பு தொடர்பான அறிவு மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றத்துக்கான சாத்தியக்கூறுகள் குறித்து பேசினார்.

கலந்துரையாடலின் முடிவில், ஜெனரல் குணரத்ன மற்றும் கொரிய தூதுவர் லீ ஆகியோர் நிகழ்வைக் குறிக்கும் வகையில் நினைவுச் சின்னங்களை பரிமாறிக் கொண்டனர்.

இந்த சந்திப்பின் போது பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பு அதிகாரி மேஜர் ஜெனரல் தம்மிக்க வெலகெதரவும் சமுகமளித்திருந்தார். (05)

# ஐ.நா. அலுவலகத்தில் மனுக் கையளிப்பு

*நீதித்துறையின் சுயாதீனத்தை உறுதிப்படுத்துமாறு அமைந்த கோரிக்கை மனுவை புதன்கிழமை ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிரான்ஸிடம் சிறிதரன் எம்.பி. கையளித்தார்.*

*இலங்கைத் தீவில் நீதித்துறை மீது அரச நிர்வாகத் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வகை நெருக்கீடுகள் காரணமாக நாட்டை விட்டு வெளியேறிச் சென்றுள்ள முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் ரி.சரவணராஜாவுக்கு ஏற்பட்ட அநீதிக்கு நீதி கோரி கடந்த 2 ஆம் திகதி கிளிநொச்சி நகரில் கவனவீர்ப்பு போராட்டம் நடைபெற்றிருந்தது. இந்த விடயம் தொடர்பான கோரிக்கை மனுவை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்ரனியோ குட்ரெஸுக்கு அனுப்பிவைப்பதற்கு ஏதுவாக, ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கானவதிவிடப்பிரதிநிதிமார்க்ஆண்ட்ரே பிரான்ஸிடம் கொழும்பிலுள்ள அவரது அலுவலகத்தில் வைத்து, புதன்கிழமை மனுவை சிறிதரன் எம்.பி. கையளித்தார்.(05)*

# வீட்டின் முன் நின்றுகொண்டிருந்த தாயின் தங்கச் சங்கிலியை பறித்த கொள்ளையன்

## காப்பாற்றச் சென்ற மகனின் சங்கிலியும் பறிபோனது

நீர்கொழும்பு, துங்கல்பிட்டி பகுதியில் தனது வீட்டின் முன் வீதியில் நின்றுகொண்டிருந்த பெண்ணின் கழுத்தில் இருந்த தங்கநகையை பறித்துக்கொண்டு நபர் ஒருவர் தப்பிச் சென்றுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண்ணின் அலறல் சத்தம் கேட்டு அவரது மகன் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றுள்ளார்.

குறித்த நபர் தப்பிச் செல்ல முயன்ற போது, பெண்ணின் மகன் அவரை பின்தொடர்ந்து விரட்டி சென்றுள்ளார்.

இதனை அவதானித்த திருடன் உடனே கத்தியை காட்டி மகனை பயமுறுத்தி மகனின் கழுத்தில் அணிந்திருந்த தங்க நகையையும் பறித்து சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (05)

# மது விருந்தில் மோதல் ஒருவர் சுட்டுக்கொலை

மதுபான விருந்துபசாரத்தின்போது ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தையடுத்துநபர்ஒருவர்மற்றொருவரை சுட்டுக் கொன்றுள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்த நபர் எஹதுவெள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

அம்பன்பொல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட திம்பிரிய அம்போகம பிரதேசத்தில் இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது. உயிரிழந்தவர் 27 வய-துடையவர். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.(05)

# மாணிக்கக்கல் தோண்டியவர் மீது மண் மேடு சரிந்து வீழ்ந்ததில் சாவு

## பிபிலவில் சம்பவம்

பிபில, குடகிவுல, பதுளகம்மன பிரதேசத்தில் அனுமதியற்ற மாணிக்கக்கல் தோண்டிக் கொண்டிருந்த நபர் ஒருவர் மீது மண் மேடு சரிந்து வீழ்ந்ததில் உயிரிழந்துள்ளார் என பிபில பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளகம்மன பிரதேசத்தைச் சேர்ந்த ஆர்.எம்.சமன் பிரேமதிலக (வயது - 48) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மண்மேட்டுக்கு அடியில் புதையுண்ட அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இதனையடுத்து சடலத்தை தோண்டி எடுத்து சடலம் பிரேத பரிசோதனைக்காக பிபில ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. சம்பவம் தொடர்பில் பிபில பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# யானை தாக்கி இறந்தவரின் சடலம் ஒப்படைக்கப்பட்டது

*யானை தாக்குதலுக்கு உள்ளாகி பலியாகிய குடும்ப பெண்ணின் சடலம் மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.*

*அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நெய்னாகாடு வம்பியடி பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு காட்டு யானை தாக்குதலில் கல்முனையில் இருந்து நிந்தவூர் அல்லிமூலை வழியாக இறக்காமம் பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் இரவு வேளை பயணம் செய்த பெண்ணே இவ்வாறு உயிரிழந்திருந்தார்.*

*இவ்வாறு உயிரிழந்தவர் இறக்காமம் பகுதி 9 ஆம் பிரிவைச் சேர்ந்த 43 வய-துடைய புஹாரி சரீப் விபானி என்ற 3 பிள்ளைகளின் தாயார் என்பதுடன் அண்மையில் தொழில் வாய்ப்பிற்காக வெளிநாடு ஒன்றிற்கு செல்லவிருந்தார் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இவ்வாறு மரணமடைந்த நிலையில் எடுத்து செல்லப்பட்ட குடும்பஸ்தரின் சடலம் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டு சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி த.கருணாகரனின் கட்டளையின் பிரகாரம் பிரதேச மரண விசாரணை அதிகாரி அப்துல் ஹமீட் அல் - ஜவாஹிர் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொலிஸாரின் பிரசன்னத்துடன் மரண விசாரணை மேற்கொண்ட பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (05)*

# கொள்ளுப்பிட்டி விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு தலா 5 லட்சம் ரூபாய் உதவி

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதி

*கொழும்பு, கொள்ளுப்பிட்டி லிபர்ட்டி சுற்றுவட்டத்துக்கு அருகில் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை பஸ் மீது மரம் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஐந்து லட்சம் ரூபா நிதியுதவி வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத் துள்ளார்.*

*ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, போக்குவரத்து அமைச்சுக்கும் இலங்கை போக்கு-வரத்து சபைக்கும் உரிய பணிப்புரைகளை வழங்கியுள்ளார். (05)*

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு புதிய வைத்திய அத்தியட்சகர் நியமனம்






தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு புதிய வைத்திய அத்தியட்சகராக வைத்தியர் ஏ.தேவநேசன் நியமிக்கப்பட்டு நேற்று(வெள்ளிக்கிழமை) தனது கடமைகளை உத்தியோக பூர்வமாகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இதுவரை காலமும் வைத்திய அத்தியட்சகராகக் கடமையாற்றிய வைத்தியர் எம்.எம். றெமான்ஸ், உயர் கல்வியைத் தொடர்வதற்காக செல்ல உள்ளார்.

இந்நிலையில் புதிய வைத்திய அத்தியட்சகராகக் கடமைகளைப் பொறுப்பேற்ற வைத்தியர் ஏ.தேவநேசனை வைத்தியசாலையின் தற்போதைய வைத்திய அத்தியட்சகர் மாலை அணிவித்து வரவேற்று அழைத்துச்சென்று வைத்தியசாலையின் தற்போதைய நிலைமை, அபிவிருத்தி என்பன தொடர்பில் தெளிவுபடுத்தினார்.

இந்த நிகழ்வில் வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகத்தர், வைத்திய நிபுணர்கள், தாதிய பரிபாலகிகள், மற்றும் வைத்தியர்கள், விடுதி பொறுப்பு தாதிய உத்தியோகத்தர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் மேற்பார்வை-யாளர்கள், மருத்துவ உதவியார்கள் மற்றும் பரிசாரகர்கள், சுகாதார பணி உதவியாளர்கள் என பலரும் கலந்துகொண்டு புதிய வைத்திய அத்தியட்சகர் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப் பட்டனர்.

வைத்தியர் தேவநேசன், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக, யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளராக, ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை பணிப்பாளராக என சுகாதாரத் துறையில் நீண்ட அனுபவம் மிக்க ஒரு சிரேஷ்ட நிர்வாக அதிகாரியாவார்.

(05)




யாழில்
முதல் முறையாக
சிறு கைத்தொழில் முயற்ச்சியாளர்களின்
கொண்டாட்டம்
Tourism
Northern Province
இணைந்து வழங்குவோர்
Visit North
Experience the Hospitality
NCI
CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM
CCIY
UNITY IS STRENGHT
happymarket.lk
அல்லங்காடி
கொண்டாட்டம்
அனுசரணையாளர்
synamon global
JANASHAKTHI Life
Orient Finance
ஒவ்வொரு
சனிக்கிழமைகளிலும்
04:00PM - 10:00PM
யாழ் கோட்டை
(பண்ணை சுற்றுவட்டம்)
NGO Partner
Sustainability Partner
World Vision
SMILEzone
CCH
IDEA FACTORY
THE SOCIAL INNOVATIONS LAB
ஊடக அனுசரணை
ஒழுங்கமைப்பாளர்
காலைக்கதிர் Kalaikkathir
BirdFather
More Social More Business
happymarket.lk
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்